




ஓலை 166| ஓசை 289| மார்ச் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



'குழந்தைக் கவிஞர்' கவிமணி தேசிக விநாயகம்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது**

ஒருவருக்கு ஒரு நன்மையும் நாம் செய்யாத போதும். அவர் நமக்கு உதவினால், அதற்குக் கைம்மாறாக மண்ணுலகையும் விண்ணுலகயும் கொடுத்தாலும் சமம் ஆகாது.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa · www.aagaramuthala.com · aagaramuthala@gmail.com

## உரவோ ரென்கை யிரவா திருத்தல்!

பாவகை : எட்டடித் தரவு கொச்சகக் கலிப்பா




வெண்ணிலவுச் செங்கதிரை விண்மீன்கள் போன்றகோள்கள்
விண்ணுலகம் சுமக்காமல் வெண்ணொளியை இலவயமாய்
மண்ணுலகில் வழங்குவதாய் வாய்கிழியப் பேசியீந்தால்
எண்ணித்தான் பார்க்காமல் இரப்பதுவும் இழிவாகும்;
கண்ணினையே பிடுங்கிவிட்டு காட்சியினைக் காணென்னும்
பண்பற்றோர் தம்மைநாடிப் பணிவுடனே இரத்தலுமே
பண்பாடு தன்மானம் பார்க்காத இழிவாகும்.
எண்ணியேதான் இரத்தலினை இடரென்றே புறக்கணிப்பீர்!

மின்னலினை இடியினையும் தென்றலையும் மேகமது
புன்னகையாய்ச் சுமக்காமல் இன்முகத்தைக் காட்டாமல்
நன்னீராம் மழையினையும் நானிலத்தில் ஈவதாக
துன்பத்தை வறுமையாக துயருடனே தருவதையும்
பொன்பொருளாய் எண்ணியுமே பொறுமையாகத்
தன்மானம் மண்ணுலகம் தான்மறந்து இரப்பதில்லை;
தன்னுழைப்பால் பொருளீட்டத் தான்முனையார் கையேந்தி
பொன்னெனினும் இரத்தலுமே பொதுமையற்ற இழிவாகும்!




தண்ணீர்க்கும் நீர்வேட்கை தணியாமல் இருக்குமென
தண்ணீரைக் கடலதுவும் தரைப்பார்த்துக் கேட்பதில்லை;
எண்ணியேதான் முகிலிடத்தில் இரப்பதுவே நயன்மையாகும்;
கண்ணிவெடி கையேந்தி கானலிடம் இரப்பதுவோ?
கண்மணியே கண்ணீரைக் கைநீட்டி இரப்பதுவோ?
எண்ணற்றச் செல்வமாக ஏற்றயாற்றல் உழைப்பிருக்க,
மண்ணாக மனம்படைத்தோர் மண்டியுள்ள அரசியலார்
கண்முன்னே மக்களெல்லாம் கையேந்தி இரப்பதுவோ?

### இலக்கணக் குறிப்பு:

இது எட்டடித் தரவு கொச்சகக் கலிப்பா. எட்டடியும் ஓரெதுகைப் பெற்று, அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று, அடி தோறும் நான்கு சீர்கள் பெற்று எண்சீர் மண்டிலம் போல் வந்ததாகும். தளை பார்க்கத் தேவையில்லை. இருப்பினும் வெண்டளை கொண்டும் எழுதலாம். ஈரசைச் சீர்களும் விரவி நிரையசையில் தொடங்கும் வரலாம். பெரும்பான்மையாக ஆனால், நேரசையிலும் தொடங்கலாம். மேலே உள்ளவை மூன்று பாடல்களும் நேரசையில் தொடங்கப் பட்டவை.

## நேரிசை வெண்பா

வாழ்வியல் தன்னையே வள்ளுவம் கூறிடும்
வாழ்விலே செம்மை வழிந்திடக்-காழ்ப்பிலா
வாழ்க்கைதனை நாளுமே வாழ உழைத்திடும்
வாழ்நன் தொடுவானே வான் .



## குறள்வெண்பா

1. வாழும் வகைதனை வாகாய்க் கழறிடும்
வாழ்வியல் நூலை வழுத்து.

2. மன்பதை தன்னிலே
மாண்புடன் வாழவே
நன்னெறி காட்டுமே நன்று.

3. வள்ளுவம் சொல்லும் வழியில் நடந்திட
உள்ளத்தில் தோன்றும் உயர்வு.

கவிஞர் செ. கலைவாணி

இதயத்தை
லேசாக்கியபடி
வாருங்கள்.



உங்கள்
கோபங்களையும்
குரோதங்களையும்
களைந்து வருவதே
என்னைப்போல்
என் கவிதைக்கும்
மிகவும் பிடிக்கும்.

மென்மனசுக்காரர்கள்
உள்ளத்தை மேலும்
மென்மையாக்கிக் கொள்ளலாம்.
இது உண்மை
ஐயம் வேண்டாம்
என் கவிதாப் பிரியர்களே!

பரிவாரப் படைகள்
வேண்டாம்.
தனித்தே வாருங்கள்.
உங்களுக்கு
பரிவட்டம் சூட்டும்
பாங்கு மிகு
பாசக் கவிதை எனது.

கவலைகள்
காணாமல் போகும்.
கனவுகள்
ஊற்றெடுக்கும்.
வெற்றிகள் பிறப்பெடுக்கும்
உன்னதத்தை நீங்கள்
நிச்சயம் உணர்வீர்கள்.

பூக்கள் வெடிக்கும்
சப்தத்தைக்
கேட்டறியா நீங்கள்
கவிதையின் நிறைவில்
அதை-
இங்கிதமாய் கேட்டு
செல்லலாம்.

மனசு முழுக்க
மின்மினிகளும்
வண்ணத்திகளும்
வட்டமிடும் மகோன்னதத்தை
இப்பிறவியிலே
இப்பொழுதே
இந்தக் கவிதையில்
உங்கள்-
வசமாக்கிக் கொள்ளுங்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

எப்போதும் அடர்வுகளோடு
வண்ணம் பூசிக்கொள்ளும்
வாதை பிறக்கிறது என்னுள்.

சிறகுகளை அகல விரித்து
காற்றுவெளியில் நீள்வட்டம் அடித்து விட்டு
புலரும் பொன் காலை நேரத்தில்
வருமொழி ஏதும்
வாஞ்சையாய்ப் பிறக்காதோ உன்னிடமென
நப்பாசையின் மிகுதியில்
எப்போதும் போல் என்னுள் நகர்கிறது
தூசு படிந்த என் காலச் சக்கரம்.



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# முகவரி நீயே!

முகவரி தந்தாய்
முகத்தை விதைத்தாய்
கனவிலும் நனவிலும்
கரம்பிடித்தே நின்றாய்
கொடிகட்டி வாழ்ந்திட
கொலுவாய் வந்தாய்.
முன்னின்று வழியமைத்தாய்
முத்தாக பிரதிபலித்தாய்
வயிறு நிறைந்ததாக
வளங்களைச் சேர்த்தாய்



பவள வாயில்
பகலவனை பழித்தாய்
ஆதிக்கம் செலுத்தும்
ஆதவனாய் பவனியானாய்
பனிக்கும் பகலுக்கும்
பசலை நோய்க்கும்
மூச்சுக் காற்றிலே
மூடல்கள் பிறப்பித்தாய்
உண்டியும் பழகியே
உலகிற்கே வெளிச்சமிட்டாய்

உதிர்ந்த மலரல்ல
உதிரியாய் போயிட
அண்ணாந்து பார்க்கும்
அகன்ற விண்மீனானாய்
விண்ணில் பறக்கும்
வெண்கொற்றக் குடையாய்
தேவதையின் அன்பின்
தேன்மொழிய் திணறடித்தாய்
புரவியில் வரும்
புன்னகை மகளானாய்

பின்னோட்டமிடும் புயலின்
பிரளயம் செய்வாய்
முகமூடியின்றி அரசியின்
முயற்சிகளில் முன்னவளானாய்
முக்கோடி தேவரும்
முந்தித் தேடும்
குந்தவையே நந்தினியே
குலமகளின் இளையவளே!
முத்தமிழின் வரியாம்
முகவரி நீயே!

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

பெருமை கொள்ளாதே மானிடா! — இந்த
வையம் உனக்காய் பிறந்ததா?

உன்னை விடத் திறமையானவர் இங்குண்டு!
உன்னை விடப் பேரறிஞர்கள் இங்குண்டு!
உன்னை விடச் செல்வந்தர்கள் இங்குண்டு!
உன்னை மிஞ்சும் அதிகார வர்க்கமும் இங்குண்டு!



பெருமை கொள்ளாதே மானிடா! — இந்த
உலகம் உன்னால் படைக்கப்பட்டதா?
உயர்ந்தவர் பலர் இங்கே இருக்கையிலே...
உன் அகந்தை எதற்கு மானிடா?

உன்னை விடத் தாழ்ந்தவர்களும் உண்டு!
உன்னை விட அன்பானவர்களும் உண்டு!
உன்னை விடக் கொடைவள்ளல்களும் உண்டு!
உன்னை விடச் சான்றோர்களும் உண்டு!

உன்னை விடத் தீயவர்களும் உண்டு!
உன்னை விடப் பெரியவர்களும் உண்டு!
உன்னை விடச் சிறியவர்களும் உண்டு!

ஆதலால்...
பெருமை கொள்ளாதே மானிடா! — இந்த
வையம் உனக்காய் பிறந்ததா?

கவிஞர் ஏ எம் முர்ஷிதா பேகம், கண்டி (இலங்கை)

அப்பாவின் கைபிடித்து நடந்த பெண்,
'பயம்' எனும் சொல்லையே அறியமாட்டாள்.
ஏனெனில், அவளுக்குப் பின்னால் நிற்பது
அன்பும் அரணுமான அப்பா!

உலகம் அவளைச் சோதித்தாலும்,
அப்பாவின் நம்பிக்கையே அவளைத் தாங்கும்.
அந்த ஒரு பார்வை போதும்,
"நீ விழும்போது, நான் இருக்கிறேன்" என்று சொல்ல!

அப்பாவின் அன்பு
மகளின் மனதிற்கு ஒரு கவசம்.
அந்த அன்பு இருக்கும் வரை,
அவள் 'தோல்வி' எனும் சொல்லையே அறியமாட்டாள்!




கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

மோட்டார் வாகனங்கள்
புகையைக் கக்கிச் சுற்றுச்சூழலை
மாசு படுத்தி,
மனிதர்க்கு நோய்களைப் பரிசளிக்கின்றன!


கொலை, கொள்ளை,
கஞ்சா, பாலியல் வன்முறை,
பிஞ்சுகளைக் கிள்ளும் குழந்தைத்திருமணம்.
இன்னும் இன்னும் பெருகும்
போதை தரும் எண்ணற்ற குற்றங்கள்!

இறுதியாக,
"வானும் எரிகிறது
வயிறும் எரிகிறது" எனும் முதுமொழி
இங்கே உண்மையாகிப் போனது!



கவிஞர் மா. மோனிஷா

பிறழ்ச்சி முற்றிப் பெருகி பிணி
சூழ தேயும் அரசு.
அவ்விய நெஞ்சத்தான் அகம் புக
அல்லற் படும் நாடு.
அரவ மற்ற அங்காடித் தெரு
அறிவிப் பில்லா விலை உயர்வு
அகம் அறுந்த அணங்கு
அல்லற் படும் மக்கள்.



"பிறழ்ச்சி-ஒழுங்கின்மை
பிணி-வறுமை
அகம்-நிலம்,அவை ,உள்ளம்.
அணங்கு-பெண்

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

இயற்கையின் இதயத்தில்
நெகிழியின் அத்துமீறல்
மாரடைப்பில் உலகம்

சுற்றுலா பயணிகளின்
ஊர்வலத்தில் உடன்பிறப்பாய்
நெகிழி

சாலையோரங்களில் நெகிழியின்
முகங்கள் வனவிலங்குகளின்
முகமூடிகளாய்

காடுகளின் காலடியில்
சர்க்கரை புண்களாய்
நெகிழிகள்



வீசப்படும் குப்பைகள் உரமாக
நெகிழியோ உயிர் தின்னும்
உற்சாகமாய்

மனிதா நெகிழியை
தொலைத்து விடு
உலகத்தை காத்திடு

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# மல்லிகைப்பூ வாசக்காரி
# மாமனோடச் சொந்தக்காரி

*******************************



மரிக்கொழுந்து மணத்துல
மனசுந்தான் கெறங்குதடி

செம்பருத்தி நெறத்துக்காரி
செம்பவள ஒதட்டுக்காரி

வாடாமலர் சேலைக்காரி
வாளிப்பான ஒடம்புக்காரி

தாமரைத் தடாகத்துல
தள்ளாடுதே ஒன்மேனியுமே

பிச்சுப்பூச் சிரிப்புல
பித்தனாகிப் போனேன்டி

மல்லிகைப்பூ வாசக்காரி
மாமனோடச் சொந்தக்காரி

ஓரக்கண்ணால பாத்துகிட்டு
ஒய்யாரமா போறியே

எம்மனசு துடிக்குதடி
ஒனக்கது கேக்கலியா

வட்டப் பொட்டுக்காரி
வசியம் பண்ணியவளே

தயங்காம வாபுள்ள
ஆசையாப் பேசுவோமடி

ஒறவுக்காரன் நானிருக்கேன்
மாலையிடக் காத்திருக்கேன்

சம்மதம் சொல்லிடு
சந்தோசமா வாழ்ந்திடலாம்.

கவிஞர் ஒப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

சத்தம் கேட்கா வானம் கண்டேன்;
யுத்தம் செய்யாப் பூமி என்றேன்!
அலுவல் முடித்த அரிவையர் எல்லாம்
பதற்றமின்றி நடக்கப் பார்த்தேன்!

நடுநிசி தன்னில் நங்கையர் செல்லப்
பாதுகாப்பான பாதை அறிந்தேன்;
கண்வயல் தன்னில் நான் கண்ட
கனவுப் பூக்கள் மலரக் கண்டேன்!

சுத்தமான இயற்கைக் காற்று;
அதிலே நித்தம் ஆடும் நாற்று!
இல்லந்தோறும் தருநிழல் மரங்கள்;
தாவரங்கள் தந்த காய்கனிகள்!

முற்றம் மொய்த்த வண்டாய் மக்கள்
ஒற்றுமை காத்துப் பேசிக் களித்தனர்;
விழிச்சோலை கொட்டிய அரும்புகள்
கனவுப் பூக்களாய் அவிழக் கண்டேன்!



சாதிச் சண்டையற்ற விழாக்கள்;
சமரசம் பொங்கும் உறவுக் கூட்டம்!
எங்கும் பசுமை, இளமை, வளமை;
தாகம் தீர்த்த நதிகளின் பணிகள்!

பள்ளிக் கூடத்தில் பாகுபாடில்லை;
பாலகர் பயிலும் கல்விக் கொள்கை!
அலங்காரமற்ற அழகான பெண்கள்;
ஆபாசமற்ற அழகிய நெறிகள்!

ஆடவர் அன்பு இல்ல மாண்பு;
மக்கட்பேறில் இருபாலார் பங்கு!
கைபேசி ஆட்டம் மறந்த சிறார்கள்;
கைத்தொழில் அருமை கண்டு படிக்க.

என் இதய விருட்சம் சொரிந்த
கனவுப் பூக்கள் மணம் பரப்பின!

கவிஞர் ரெஜனாபானு, பரமக்குடி

நிலவே! உன்னைக் காணாமல்
இருளே நீளுதடி...
பகலும் கூட ஒளியின் தீண்டல்
கூடாமல் போனதடி!

நீ எங்கே எனத் தேடித்தேடி
காலங்கள் ஓய்ந்திடுதே...
வெள்ளம் போலக் கண்ணீர் வந்து
கண்களில் பாய்ந்திடுதே!



ஒரு நாழிகை வருவாயா?
வாழ்நாள் வாழ்ந்திடச் செய்வாயா?
எண்ணித் துடிப்பது நானடி...
ஏங்க வைப்பது நீயடி!

காதல் தந்து, காயம் தந்து
உயிரை வதைப்பது ஏனடி?
நிலவே! நீ இல்லாமல் வானிலும்...
என் வாழ்விலும் ஒளியில்லை!

நீ இல்லா இரவிலே
தூக்கமும் துணையில்லை;
சற்றே நீ விலகினாய்...
சுற்றும் உலகும் சுழல மறந்தது!

உயிரின் ஓசை கூடச்
சத்தமின்றி நின்று போனதடி;
நினைவின் நினைவே! காதல் நிலாவே!
எந்தன் வானில் வந்துவிடு!
நீ வந்தால் என் வானம் ஒளிரும்;
நீ இல்லையேல் என் வாழ்வே இருளாகும்!

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

குழந்தைகளின் முகபாவம்
குதூகலிக்கும் இதுகேட்டு;
குடும்பத்தைப் பிரிந்தவர்
மனம் மகிழ்வெய்தும்!

நேரத்திற்கு வண்டிவர
மகிழ்வார் பிரயாணிகள்;
சுமைதூக்குவோரும் மகிழ்வார்
வேலை கிடைத்ததென!

ஓடிக்கொண்டிருக்கும்
வண்டியில் வரும்
தின்பண்டங்கள் விற்றோரும்
வாங்கியோரும் மகிழ்வர்!



பூவிற்பவர், காய்விற்பவர்,
கனிகளை விற்பவர்;
குடிநீர், குளிர்பானம்,
தின்பண்டம் விற்பவர் மகிழ்வர்!

காலம் மாறிவிட்டது...
விரைவு, அதிவிரைவு
வண்டிகளின் அறிமுகம்;
வசதிகளுண்டு - ஆனால்
மகிழ்ச்சி கேள்விக்குறியானது!

எல்லாம் இயந்திரமயம்;
மனிதனுக்குப் பதிலிந்த
இயந்திர மனிதன்!
தொழில்நுட்பம் நம்மை
எங்கோ கொண்டுபோகிறது!

"பழையன கழிதலும் புதியன புகுதலும்"
முன்னோர் மொழிந்த தீர்க்கதரிசனம்;
போகிக்கு மட்டுமல்ல...
அதுவே சாசுவதம்!

தாத்தா பாட்டிகள்,
வீட்டுப் பெரியவர் சொன்னால்;
இப்போதைய தலைமுறை
அந்த நீட்சியில் மகிழலாம்...
உள்ளம் நிறைய!

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

சொல்லாத சொல்லின் உணர்வு!
உள் மனதின் புலன்
மனச் சோலையின்
மனோராகம் அது!
மெய் உணர் திறன்!

ஐந்தாம் திசையிலும்,
ஆறாம் புலனுணர்விலும்,
ஏழாம் சுவையிலும்,
எட்டாம் கடலிலும்,
ஒன்பதாம் சொர்க்கத்திலும்,
தேடி அலைவதில்
பயன் யாது?



கண்மூடி அமர்ந்து
உள் மனக்கடலில்
மூழ்கி முக்குளிக்க
ஆழ்கடல் விளை
ஆணிமுத்தென
உம் கையில் தானே வந்தமரும்!
அலுப்பு அயர்விலா தீரா பயணம், அது
தித்தித்து அங்கு நிலைக்கும்

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# தனிமையுடன் நான்

தனிமையுடன் நான் — இந்தத்
தரணியிலே பவனி வர...
இருளான பாதையிலும்
இல்லையே ஒரு தொல்லையே!



மறதி கண்ட மனதிலே
மகிழ்ச்சி பெருகும் உண்மையே;
துணை இல்லா வேளையில் — என்
தூரிகை உரையாட நேர்ந்ததே!

உறக்கம் தொலைத்த விழியுடன்
விடியல் விடைபெற்றதே;
புத்தகத்துடன் கொண்ட புதிய உறவு
புத்துணர்ச்சி தந்ததே!

மானிடம் அழித்த மகிழ்ச்சியை
மரக்கிளைகள் வருட — நான்
மனமகிழ்ந்து போனேனே!

தொலைபேசி தொலைத்த நிமிடத்தில்,
தொலைதூர நடையினிலே — என்
துக்கம் அதனைத் தொலைத்து,
தூக்கம் சொக்கிப் போனேனே!

தனிமையில் இனிமையை...
இடையூறு இன்றியே...
இனித் தொடரப் போனேனே!

கவிஞர் பரிமளா மணி, தியத்தலாவ (இலங்கை)

கவிஞனாய்,
ஆயிரம் கவிதைகள்
எழுத,

அவள்,
வாசித்து, நேசித்த,
கவிதைகள்
முக்தி நாடின.



கவிஞர் ஈ. தவனிதன், பல்லடம்

காற்றின் நுண் இசை போலக்
கானல் நெஞ்சம் கலங்கி ஓடும்!
நாளும் நெறி நிமிர்ந்தாலும்
நாணாச் சுமைகள் நிழலாய் நிற்கும்!

ஓர் உந்தல் ஊற்றிச் செல்ல
உள்ளம் ஓராய் உயர்ந்து நிற்கும்!
தீர்வு ஆய்ந்த நினைவு போலத்
தேடும் கிளைகள் தாழ்ந்திடுமே!



போலும் கனவின் புலர்ச்சியில்
பொழியும் கண்ணீர் புதுமை தரும்!
தாழ்வின் மண்தடம் கூடத்
தாங்கும் இனம் போல எழுந்திருக்கும்!


சுடர் போலச் சிந்தை நிறைந்து
சூழல் மாறும் சுகம் தருமே!
நெஞ்சின் நிலை நெறி போலே
நெடிநாளும் நிமிர்ந்து வாழும்!

கவிஞர் திருமதி சினேஹா வினய், சென்னை

அன்னைத் தமிழே!
அன்னை மொழியே!
ஆரோக்கிய மொழியே!
இயல்இசை நாடகத்திற்கு
ஈடிணை ஏது இம்மொழிக்கு?


உன்னத மொழியே!
ஊக்கமது எம்மொழியே!
எங்கள் செம்மொழியே!
ஏற்றமிகு பைந்தமிழே!

ஐம்பெருங் காப்பியமே!
ஒவ்வொன்றும் காவியமே!
ஓராயிரம் ஆண்டுகட்கு முன்னே தோன்றிய
அன்னை மொழிக்குத் தனிப்பெருமை என்னே!



கவிஞர் மு. கவிபாலன் (எ) மு. சோமசுந்தரம், சிதம்பரம்

மணல் எடுக்கா ஆற்றுப் படுகை;
நெகிழிப் பயன்பாடில்லா உலகம்!
சாயக்கழிவுகள் கலக்காத ஆற்றுநீர்;
விடவாயு கலக்காத தூய காற்று!
மரங்களின் அணிவகுப்பு - எங்கும்
மாதம் மும்மாரிப் பொழிவு!



உழவனுக்கு விளைச்சல் அதிகம்;
விளைபொருளுக்கு உழவனே
விதித்ததே விலை!
பாரம்பரிய உணவுகளே
எல்லோருக்கும் விருப்பமானது!

உலகின் பொதுத் தேசிய மொழியாய்த் தமிழ்;
இந்தியா முழுவதும் எழுத்து - பேச்சில்
எல்லோராலும் பயிலப்பட்டது!
எல்லா மாநிலங்களின் அலுவல் மற்றும்
பயிற்று மொழியாய்த் தமிழே உலா வந்தது!

சாதி, மதப் பாகுபாடுகள்
சட்டவிரோதமாய் அறிவிக்கப்பட்டன!
அரசியல் நுழைவுத் தேர்வு வென்றால் மட்டுமே
சட்டமன்ற உறுப்பினர் எனும் முறை வந்தது!
மதுபான ஆலைகளும் கடைகளும்
முற்றிலும் ஒழிக்கப்பட்டன!

பெண்களுக்குத் தற்காப்புக் கலை
ஐந்து வயதிலிருந்தே கற்பிக்கப்பட்டது!
கல்லாதவர் விழுக்காடு சுழியமானது;
எல்லோரிடமும் தற்சார்பு வாழ்வியல்!
சுயதொழில் மேம்பாடு இவையனைத்தும்
நூறு விழுக்காடு நடந்ததொரு...
என் கற்பனை உலகம்!

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

முதன்மை மொழியே! முத்தமிழே!
புலவர்கள் பலர் பாடிய பைந்தமிழே!

அக வாழ்வுக்குச் சிலம்பே!
புற வாழ்வுக்குத் தொல்காப்பியமே!


நற்கணக்கைக் கொண்ட செம்மொழியே!
புதுமைப் பெருமைக்கு என் அன்னை மொழியே!



கவிஞர் கிர்த்தி சோமசுந்தரம், சிதம்பரம்

மனமாற்றம் பெற்றிட, மகிழ்ச்சி கொள்ள,
இறைவனில் இணைய அழைக்குதே தவக்காலம்!
சக்கேயுவும் மகதலேனா மரியாளும் - இவர்களை
விவிலியம் சொல்கிறது "மனமாற்றம்" என்று!

எப்படி இருந்தோம் என்பதல்ல முக்கியம்,
எப்படி இறைவனில் இணைவோம் என்பதே!
ஆசைகள் நம்மை ஆளாது, ஆண்டவரே
தஞ்சம் என்று முழங்கிட அழைக்குதே தவக்காலம்!




வெளிவேடம் போடா மனிதனாய் மாறி,
வெளிவேடக்காரரை மனதிலிருந்து ஒழித்து,
நம்மை நாம் அறிந்து, நற்செயலில்
இறங்கி நிற்போம் மனமாற்றம் கண்டு!

நாற்பது நாள் நோன்பு இருந்தும்,
நாளுமொரு தீய சிந்தனை கொண்டிருந்தால்,
வாடிய முகத்துடன் ஆலயம் செல்வதில்
பயனில்லை - இதயத்தைத் தொலைத்துவிட்டு!

மாயை வலையில் வீழ்ந்துள்ள நீ,
தவக்காலத்தில் தேடிடு தூய வாழ்வை!
மனிதனே! மண்ணாய் இருக்கிறாய் - நீ
மனந்திரும்பி இறைமன்னிப்பு பெற்றிடு!

ஆடம்பர வாழ்வு ஆண்டவருடன் வாழ
அழைக்கவில்லை - அமைதியான வாழ்வே
ஆண்டவருக்குப் பிடித்தமானது!
தாவீது ராஜாவும், ஊதாரி மைந்தனும்
செய்த பாவத்திற்காக மனம் வெதும்பி அழுதனர்!

பின்னரே மகிழ்ந்து கொண்டனர் தம் வாழ்வில்!
விபூதி புதன் என்றில்லாமல், என்றும்
விலகியே வாழுங்கள் பாவச் சேற்றிலிருந்து!
ஆண்டவரும் மகிழ்வார் - தம் ஆடுகள்
அனைத்தும் தம்மோடு இருப்பதைக் கண்டு!

கவிஞர் திருமதி ஜீவனிந்ரா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

மலை முகட்டிலே தவழும் மேகக் கூட்டங்கள்!
மண்ணைத் தழுவும் மழைத் துளிகள்!
காற்றின் இசையினிலே ஆடும் இலைகள்!
இயற்கை அன்னை வடிக்கும் கவிதைகள்!

கல்லும் முள்ளும் நிறைந்த பாதையிலே,
கனிவு தரும் சோலைகளோ ஆயிரம்!
மௌனம் பேசும் மலைப் பள்ளத்தாக்கிலே,
மனம் கொள்ளும் அமைதி பேரானந்தம்!

காலைச் சூரியன் பூசும் தங்க நிறம்!
மாலைப் பொழுதினில் வழியும் செந்நிறம்!
பறவைக் கூட்டத்தினில் எழும் இன்னிசை ராகம்!
படைப்பின் ரகசியத்தை உணர்த்தும் தருணம்!

விதையிலிருந்து எழும் விஸ்வரூபம்!
நதியிலிருந்து பிறக்கும் நர்த்தனம்!
இயற்கையைப் போற்றுதல் இறை வழிபாடு;
இதைக் காப்பதே நம் கடமைப்பாடு!



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

வாழும் இந்த வாழ்க்கை தான்
வளமையும் செழுமையும் வரலாற்றுச் சிறப்பும்
செம்மையாய்ப் பெற்றிட.
உண்மையும் நேர்மையும் உயர்வான சிந்தனையும்
உச்சத்தில் நம்மையே உயர்த்தி வைக்கும்
இதுவே உண்மையே!



நாடக மேடையில் நாமெல்லாம் நடிகர்களாய்
ஏற்கின்ற பாத்திரம் வாழ்வியலைச் சொல்லுமே.
பாடமாய் நம் வாழ்வு சக உயிர்க்கும் பயன்தர,
தரமான வாழ்வையே நம் மூச்சாய்க் கொள்வோமே!

இரவும் பகலும் இயற்கையின் சுழற்சி போல்
நன்மையும் தீமையும் நம் செயலின் விளைவுதான்.
வரும் தலைமுறை உயர்வுபெற
வரலாறாய் நம் வாழ்வு மாறிட வேண்டுமே!

பல்லுயிருக்கும் பொதுவான பூமிப்பந்தின்
மாண்புதனைத் தாங்கும் நல்ல கடமையும்.
இயற்கையை உயிராய்ப் போற்றிக் காக்கும் செயல்களுமே,
எதிர்காலச் சந்ததிக்கு நாம் செய்யும் கொடையே!

தரமான செயல்களால் நம் வாழ்வு அமைந்திட்டால்,
எதிர்வரும் தலைமுறைக்கு அது "கல்வெட்டாய்" இருந்திடுமே!
பூமியே சொர்க்கமாய்ப் பூத்துக் குலுங்கிடுமே!

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

காலைக்கு வரவேற்பு!
கவிதையின் பிறப்பு!
வார்த்தைகளின் வனப்பு!
மனதுக்குள் மத்தாப்பு!

ஏகாந்த நினைப்பு!
கண்ணிமை கரிப்பு!
காகிதத்தின் படபடப்பு!
சருகுகளின் சலசலப்பு!



மேகத்தின் முணுமுணுப்பு!
துளிகளின் கலகலப்பு!
ஏனிந்த தவிப்பு?
அகலாத சிரிப்பு!

கற்பனையின் வார்ப்பு!
காலத்தின் மதிப்பு!
கவிதையின் தொகுப்பு!
அதிகாலைக் காபி
அடடா! தனிச்சிறப்பு!

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி

கடந்து சென்றால் என்ன? குறுக்கே தோல்வி வந்தால் - உன்
உழைப்பின் வீரியத்தில் புதிய பாதை தெரிந்தால்!
உலகம் மறுக்கக்கூடும், உன்னைச் சோதிக்கலாம்;
உயர்வை நோக்கிய உன் கனவை யாரால் தடுக்கலாம்?

"உணர்வுகள் இல்லை" எனச் சிலர் கேலி செய்கின்றார்;
உள்ளத்தின் கனலை அவர்கள் ஏனோ உணர்ந்திடார்!
ஊரார் பேசிடட்டும், ஊசல் போல் மாறிடட்டும்;
உன் உழைப்பால் காலத்தை மாற்றும் திறன் உண்டாகட்டும்!



ஒருநாள் நீ வெற்றியின் மேடையில் நிற்பாய்;
உழைப்பின் நிழலில் பெருமையாய் உயர்வாய்!
வார்த்தைகள் சொன்னாலே வாழ்வு மலராது;
வனம் சென்றாலும் உழைத்தே வழி காணலாம்!


உறவுகள் கூட உழைப்பின் பின்னாலே வரும்;
உண்மை நேரம் வந்தால் எல்லாம் புரியும்!
கனவுகளை நிதர்சனமாக்கும் நம்பிக்கையே - உனக்குத் துணையாக;
கடந்து சென்றால் என்ன? நீயே வெற்றி யுகமாய் விளங்குவாய்!

கவிஞர் ரிஸ்னா அருஸ், அக்குறணை (இலங்கை)

நெடுந்தூரம் செல்லும் பயணத்தில் - உந்தன்
தரிசனம் காண ஆறாப் பெருவிருப்பம்!
காத்திருந்த கண்களுக்குக் காட்சி தரும்
காமதேனுவின் அம்சம் நீ!

எட்டாண்டுகள் கழிந்த பின்னே - உந்தன்
தரிசனம் காண என்னை இப்போது
அழைத்ததன் காரணம்தான் என்ன?

என்னவன் கடைக்கண்ணில் கசிந்த
கண்ணீரின் பக்தியோ?
உந்தன் தரிசனம் காண முடியாதெனக்
கொண்ட ஏக்கத்தின் முக்தியோ?
"உன்னைக் கண்டபின் என் ஆயுள் முடியும்"
என்றுரைத்த உள்ளத்தின் வலிகளோ?



இன்று, உரைத்தவர் ஏனோ அருகில் இல்லை;
என்னுள் உறைந்திட்ட அவர் ஆத்மா,
உந்தன் தரிசனம் கண்டு அமைதி பெறுமா
என்றறியவே மனம் விழைகிறேன்!

உந்தன் பதமலர் பாதத்தில் பணிந்து,
என்னவன் அணிந்த மணிமாலையைத்
துங்கபத்ரா நதிநீரில் சமர்ப்பிக்க...
மனமுருகி மந்திராலயம் வருகிறேன்!

உன் பக்தனின் துணையானவள் - இன்று
நானும் உன் பக்தையாகவே
உன்னில் சரணடைகிறேன்!

குரு ராகவேந்திர சுவாமியே சரணம்!

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# நுழைவாயில்

திறந்தே இல்லாத, நுழையவே இயலாத
வாயில்களுள் நுழையவே - இந்த
மனமும் மனமார விருப்பத்தைத் தொடுகிறது!

பூத்துக் குலுங்கும் வாசனைப் பூவிதழ்களை
எட்டிப் பறிக்க - பட்டும்படாத
கை எட்டலில், கால்கள் ஊன்றியும்
இயலாமையில் ஊன்றுகோலைத் தேடுகிறது!



வானம் ஏந்திக்கொண்ட பௌர்ணமி விளக்கை
விடியும் வரை பார்த்திருத்தல் - அது
அலாதியான பிரியம் தான்!
மூடாத விழிகளுள் உள்நுழைதல்
தூக்கத்திற்கு முடியும் தான்!

விட்டத்தை வெறித்துக்
கொட்டக் கொட்ட விழிப்பில் - மடியாத,
மங்காத அசைதல் கொண்ட விருப்பைத்
தீயிட்டும் மூட முடிவதில்லை!

பார்த்திருந்த பச்சிலைகளும்
பைங்கிளியாய் நிறம் மாறுதலும் - அவை
வர்ண வர்ண ஈர்ப்புகள் தான்!
தூங்காத ராத்திரி மேய்தல் கொண்ட
புலராத ஏதோ ஒரு விருப்பை எண்ணியிருத்தல்!

அயராத உழைப்பலை கொந்தளிப்பில்
நீந்திச் செல்லும் அவைகளும் - நுழைதலுக்காய்
நுழைவாயிலைத் தேடித் தேடி நிற்கும்!

மாறாப் புன்முறுவலும்,
முடக்கி வைக்கும் முக்காடிட்டு
மூடிவைத்த ஆசைகளும் - நுழைந்து
வெளியேறிட நுழைதலை எதிர்பார்க்கும்!

ஆறாத வடுவும், காயமேந்திய நிலையும்
நீந்தி வரும் நினைவேந்தலில்...
கொறித்துத் தூவிய கசப்பின் மிச்சமெல்லாம்
இனிப்பற்றுப் போனவை தான்!

நுழைவாயிலை எதிர்பார்த்து,
நுழைதலுக்காகக் காத்திருந்து,
வழியில்லாது திரும்புதலற்று ஒடுங்கியவையும் -
நுழைதலுக்காகவே தவமிருக்கும்!

கவிஞர் சஞ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

இழக்கும் பணம்
மகிழ்ச்சியைத் தருகிறது
தானம்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்



1.
கடைசி வரை அப்பா
செருப்பு அணிந்ததே இல்லை;
சாதிக்கும்... வீதிக்கும்...
பணிந்ததால்!

2.
கடைசிப் பருக்கை தீரும் வரை
பரிமாறும் அம்மாவின்
கை கர்ணனாக இருக்கையில்...
அவள் வயிறு மட்டும்
குசேலனாக இருக்கும்!

3.
பல்லியின் குரலுக்குப்
பலன் பார்த்தது போதும்;
பள்ளிக்குப் போய்ப்
படித்துப் பலனைப் பார்!

4.
ஆசையை ஒழிக்க...
புத்தனாக
ஆசைப்பட்டேன்!

5.
பாற்கடலைக்
கடைவது எளிது;
பணமில்லாமல்
பாசக்கடலைக்
கடைவது அரிது!

6.
சில்லறையைப் பார்த்ததும்
ஆணவத்தில் நாத்திகம்;
கல்லறையைப் பார்த்ததும்
அச்சத்தில் ஆத்திகம்!

7.
இறந்து உயிர் தந்தார்...
உயிலுக்கு,
அப்பா!

8.
பொதுப் பாதையில்
நூறடியை வளைத்துப் போட்டு
வீடு கட்டியவனை...
ஆறடிக்குள் அழைக்கக்
காலம் காத்திருந்தது!

9.
கனவிலாவது வருமா காதல்?
பார்வை
இல்லாதவனுக்கு!

10.
அரிசியில் புழுக்கள்...
எப்படிப் போடுவது
எறும்புகளுக்கு?

கவிஞர் முனைவர். அ. ச. மு. முனியாண்டி

வெள்ளந்திச் சிரிப்பால் மென்மையாகிப் போகாது;
வெள்ளந்திச் சிரிப்பால் கருணை நினைவுக்கு வாராது!
வெள்ளந்திச் சிரிப்பால் வெள்ளை மனம் புரியாது;
வெள்ளந்திச் சிரிப்பால் துயர்தன்னை அறியாது!



வெள்ளந்திச் சிரிப்புக் கொண்டிட்ட மழலையே!
வெகுளித்தனம் மாறாத அழகுப் பதுமையே!
இக்காலத்தில் வெள்ளந்தியாய் இருந்திட்டால் - உன்
கற்பினை ஏமாற்றிச் சூறையாடியே...

பெண் எனும் பெயரைக் கேள்விக்குறி ஆக்கியே,
பெண்மைக்குரிய அடையாளத்தைத் தனை அழித்தே,
சிறுபிஞ்சு முதல் மூத்தோர் வரை - எவரையும்
விடுவிப்பதாக இல்லையே இந்தக் கயவர் உலகம்!

அதனால் பெண்ணே...
தாய் வயிற்றிலிருக்கும் போதே அறிந்துகொள்;
கயமைகளும் கயவர்கள் சிலரும் வாழும் உலகமிது!
கயவர்களை இனங்கண்டு காலனிடம் அனுப்பிடு!

வெள்ளந்திச் சிரிப்பால் நின்றிடாது - வீறுகொண்ட
சிங்கமாய்ப் புலியாய்ப் பாய்ந்து அழித்திடு!
வெள்ளந்திச் சிரிப்பும் வேண்டாம்;
வெள்ளை மனமும் வேண்டாம்!

வீறுகொண்டு எழும் தைரியத்துடனே வேங்கையென மாறிடு;
கயமையைக் கண்கண்டால் கர்ஜித்து எழுந்திடு!
கயவனைக் கண்கண்டால் - அவனைக்
கல்லால் அடித்துக் கொன்றிடு!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

பயணிக்கத் தேவை பாதை! - இடைவிடா
முயற்சியுடன் எந்நாளும் உழைப்போரை,
மேன்மேலும் முன்னேறிச் செல்லத்
தூண்டிடும் இந்தப் பாதை!

தன்னம்பிக்கை கொண்டு பயணிப்போர் தமக்குத்
தன்னால் வழிவிடும் இந்தப் பாதை!
கரடுமுரடான கற்கள், முட்களாய் இருந்தாலும்,
உறுதியுடன் பயணிக்க... விரும்பிய
இடம் சேர வழிகாட்டும் பாதை!



ஏற்ற இறக்கங்கள் ஆயிரம் வந்தாலும்,
முடிவில் வெற்றியைப் பரிசளிக்கும் பாதை!
நன்மை தீமைகள் நாம் தேர்வு செய்யும்
பாதைக்கேற்ப நம்மை வந்து சேர்ந்திடுமே!

போதையின் பாதையில் போகாமல் இருந்தாலே
நன்மைகள் பலவும் விளைந்திடுமே!
அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு கணமும்
அறியாத உலகக் கதவுகளைத் திறக்கும்!

பயணம் தொடரும் வரை பாதை அழைத்திடுமே!
சிந்தனை தெளிந்தால் முடிந்திடும் நிந்தை;
செய்யும் வினைகள் வெற்றியில் முடியும்!
தடம்பதித்தோர் பட்டியலில் நம் பெயரும்
தவறாமல் இடம் பிடிக்கும்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

வந்துவிழும் அடைமழைத் துளிகளை
ஒன்றுவிடாமல் எண்ணத் துடிப்பவள்! (துடிப்பவன்)

விடிகின்ற வரை
வானத்தின் பால்நிலவைப்
பார்வையால் சிறைபிடிப்பவள்! (சிறைபிடிப்பவன்)



எண்ணத்தில்,
விண்வெளி போகும் வழியறிந்தவள்!
கிளி பேசும் மொழியறிந்தவள்!

வானவில்...
வந்துபோகும் வர்ணக்கோடுகள்
என்றழைப்போர் மத்தியில்,

மழலை மழைத்துளிகள்
மரித்து மண்ணில் விழுந்ததால் - அந்த
வானம் வைத்த மலர்வளையம் என்பவள்!

ஆகாரமின்றித் தவித்தாலும்
வானம்பாடியாய் - எந்த
ஆதாயமுமின்றிப் பாடுபவள்!

மொழிக் கதவு திறந்து,
நல் கவிதைகள் படைப்பவள்!

கவிஞர் ரேணுகா

வான்மழை பொழிந்து - இந்நாடு
செழிக்க வேண்டும்!
குண்டுமழை பொழிந்து - குருதியால்
மண் சிவக்க வேண்டுமா?

கொஞ்சம் சிந்தித்துப் பாரீர்!
இதயமற்ற செயலால் - நீங்கள்
இரக்கமற்றுப் போகாதீர்!

உயிர் ஒன்றும்
சந்தையில் விற்கப்படும் - ஒரு
மலிவான பொருள் அல்ல!
வேற்றுமை இன்றி - நம்
குருதியின் நிறம் அனைவருக்கும் ஒன்றுதான்!



அகங்காரத்தால்
அடுத்த நாட்டில் தாக்குதல் நடத்த...
பிஞ்சு உள்ளங்களும், தாய்மார்களும்,
முதியவர்களும் திக்குத் தெரியாமல்
திண்டாடி நிற்பது தெரியவில்லையா?

போதும் இந்த குண்டுச் சத்தம்!
போர் நிறுத்தம் செய்வீர்!
நிலைகுலைந்து வாழ்விழந்து
பரிதவிக்கும் மக்களின் - இந்தப்
பரிதாப நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திடுவோம்!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

**1. எத்தனை ரகம்!**

இறைவனை வணங்குவதில்தான்
எத்தனை வகை!

தினசரியாய்ப் பிரார்த்தனை,
காரியத்திற்காகப் பிரார்த்தனை,
நன்றிக்காகப் பிரார்த்தனை,
கேட்டது கிடைக்கவில்லை என
மீண்டும் மீண்டும் பிரார்த்தனை!

வீட்டிலேயே பிரார்த்தனை,
தினசரி கோயிலில் பிரார்த்தனை,
விசேஷ நாட்களில் மட்டும்
கோயிலில் பிரார்த்தனை!

தனக்காக மட்டும் பிரார்த்தனை,
உறவுக்கும் நட்புக்கும் பிரார்த்தனை,
சமூகத்திற்காகவே பிரார்த்தனை!

நேருக்கு நேர் வணங்கிப் பிரார்த்தனை,
கண்மூடிப் பிரார்த்தனை,
அருகில் யாரும் இல்லையெனில்
சத்தமாய்ப் பிரார்த்தனை!

அருகில் மனிதர் இருக்கையில் — தன்
இதழால் தனக்கு மட்டும் கேட்கும்படி
முணுமுணுத்துப் பிரார்த்தனை!



***********************

**2. பொருளாதாரம் சாரா மகிழ்ச்சி**

இதுதான் நடக்கும் எனச்
சொன்ன விஷயம்
அப்படியே நடக்கையில்...

மனதில் உதித்த எண்ணங்களை
அப்படியே
வார்த்தையாக்கும் போது...

திட்டமிட்டபடியே
செயல் முடிகின்ற போது...

உரிய நேரத்தில் செய்த உதவியால்
பெற்றவர் முகத்தில்
மலர்ச்சி காணும் போது...

நம்மைப் போலவே
மற்றவரும்
யோசிக்கையில்...

எதிர்மனிதனின் உடல்மொழியால்
மனதை ஊகிக்க முடிகிற போது...

நெடிய இடைவெளிக்குப் பின்
உறவின் மற்றும் நட்பின்
சந்திப்பில்...

வருவது பெரு உவகை!

எல்லாச் சந்தோஷங்களும்
பொருளாதாரம் சார்ந்ததாய்
இருக்க வேண்டிய
அவசியமில்லை!

மருதாணி என்பது தெற்காசியாவில் பிரபலமான ஒரு பாரம்பரிய அழகுச் சிகிச்சை. கைகளிலும் கால்களிலும் மருதாணி வரைவது ஒரு கலை; ஆனால், இந்த மருதாணிக்குப் பின்னால் ஓர் உணர்வுப்பூர்வமான கதை இருக்கிறது.



கிராமத்தில் வசித்து வந்தாள் ராமு. அவளுக்குத் திருமணம் நிச்சயமானது. ஊரில் எந்தப் பெண்ணுக்குத் திருமணம் நடக்கப்போகிறதோ, அந்தப் பெண்ணுக்கு மருதாணி வைத்து அழகு பார்ப்பது வழக்கம். அந்த வகையில் ராமுவிற்கும் மருதாணி வைக்கப்பட்டது.

ஆனால், திருமண நாளன்று ராமுவின் காதலன் வந்து, அவளைக் காதலிப்பதாகக் கூறுகிறான். ராமு திகைத்துப் போகிறாள்; அவள் மனம் கலங்குகிறது. காதலனை விடுத்து, குடும்பத்தின் மரியாதைக்காகத் திருமணத்திற்குச் சம்மதிக்கிறாள்.

அப்போது மருதாணி வைத்த பெண், ராமுவின் கைகளைப் பார்க்கிறாள். மருதாணி வரையப்பட்ட கைகள் கண்ணீரால் கழுவப்பட்டு, அழகு குன்றி இருந்தன. ராமுவின் மனம் உடைந்திருப்பதை அந்தப் பெண் புரிந்துகொள்கிறாள். மருதாணி வைக்கும்போது அது மனதின் உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது. ராமுவின் கைகளில் வரையப்பட்ட மருதாணி, அவளது மனதின் கதையை மௌனமாகச் சொன்னது.

ராமுவின் காதலன் அவள் திருமணத்தை நிறுத்த முயற்சி செய்கிறான். ஆனால், ராமு அவனை மறுத்துத் திருமண மேடைக்குச் செல்கிறாள். அவள் மனம் உடைந்தாலும், குடும்பத்தின் கௌரவத்திற்காகத் தன் காதலைத் தியாகம் செய்கிறாள். இப்படி, மருதாணி என்பது ஒரு பெண்ணின் மன உணர்வுகளைப் பிரதிபலிக்கும் ஒரு கலை வடிவம்.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குரணை, கண்டி

அசாம், பாத்திமா ஆகிய இருவருடைய நட்பு பாடசாலையில் தொடங்கி, கல்லூரியிலும் தொடர்ந்து, இறுதியில் வேலை பார்க்கும் இடம் வரை நீடித்தது. நீண்ட கால நண்பர்களாக இருந்த இவர்களது உறவு மெல்லக் காதலாக மாறியது. இவர்களது காதல் விவகாரம் வீட்டிற்குத் தெரிய வந்தபோது, இரு வீட்டாரின் சம்மதத்துடன் திருமண ஒப்பந்தம் செய்ய இருவருமே விரும்பினர்.

அதன்படி திருமண ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடந்தன. திருமணத்திற்கு ஆடைகள் எடுப்பது, வீட்டிற்கு வர்ணம் பூசுவது, உறவினர்களுக்கு அழைப்பிதழ் வழங்குவது, விருந்து உபசாரங்கள் எனத் திருமண வேலைகள் கோலாகலமாக நடந்துகொண்டிருந்தன. இந்தச் சந்தோஷமான சூழலில், திடீரென்று ஒருநாள் அசாமிற்கு மயக்கம் ஏற்பட்டது. அதனைச் சாதாரண மயக்கம் என்று எண்ணிக் குடும்பத்தினர் விட்டுவிட்டனர். ஆனால், திருமண நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த வேளையில், மீண்டும் ஒருமுறை அசாமிற்கு மயக்கம் வந்தது. இரண்டாவது முறையாக மயக்கம் ஏற்பட்டதால், அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். மருத்துவர் நீண்ட நேரமாக அசாமைச் சோதனை செய்துகொண்டிருந்தார்.

நேரம் கடந்தும் மருத்துவர் ஏதும் கூறாததால் குடும்பத்தினர் பீதியடைந்தனர். சற்று நேரம் கழித்து அசாமின் தந்தையைத் தனியே அழைத்த மருத்துவர், அவரிடம் அசாமின் உடல்நிலை பற்றி விவரித்தார். "அசாமின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. அவருக்கு இரத்தப் புற்றுநோய் (Blood Cancer) உள்ளது. அவர் இன்னும் ஆறு மாத காலங்கள் தான் உயிருடன் இருப்பார். இருக்கும் காலம் வரை அவர் சிகிச்சை எடுத்துக்கொண்டே இருக்க வேண்டும்" என்று மருத்துவர் கூறியதைக் கேட்டு, தந்தை நிலைகுலைந்து போனார்.

திருமண நாள் நெருங்கிவிட்ட நேரத்தில், இடியென வந்த இந்தச் செய்தியால் குடும்பமே அதிர்ச்சியில் உறைந்தது. இச்செய்தி பாத்திமாவின் வீட்டிற்குத் தெரிவிக்கப்பட்டபோது, இரு வீட்டாரும் இணைந்து

என். எப். நிஹா, இறக்காமம், அம்பாறை மாவட்டம்

திருமணத்தை நிறுத்துவதென முடிவெடுத்தனர்.

அசாம் விபரத்தைப் பாத்திமாவிடம் கூறினார்: "நான் இன்னும் ஆறு மாதங்கள் தான் உயிருடன் இருப்பேன். நான் இருக்கும் காலம் வரை நீ மருத்துவச் சிகிச்சைகளுக்காகக் கஷ்டப்பட வேண்டும். அந்தத் துயரம் உனக்கு வேண்டாம். நீ வேறொருவரைத் திருமணம் செய்து சந்தோஷமாக வாழ்," என்று தன் கவலைகளைப் புதைத்துக்கொண்டு உறுதியாகக் கூறினார்.

அசாம் எவ்வளவுதான் தன் கவலைகளை மறைக்க முயன்றாலும், அவரது கண்கள் கண்ணீரைச் சிந்திக்கொண்டே இருந்தன. ஆனால், பாத்திமா அதற்கு இணங்கவில்லை; தன் முடிவில் பிடிவாதமாக நின்றாள். "நான் வாழ்ந்தாலும் மரணித்தாலும் அது உன்னோடுதான். அது ஆறு மாத காலமோ அல்லது ஒரு நிமிடமோ எதுவாக இருந்தாலும், நான் வாழ்வது உன்னோடு மட்டும்தான்," என்று உறுதியாகக் கூறிவிட்டாள்.

இதைக்கேட்ட குடும்பத்தினர் இத்திருமணத்திற்கு முதலில் எதிர்ப்புக் தெரிவித்தனர். ஆனால், மகளின் மீது கொண்ட அளவு கடந்த பாசத்தினால், அவள் விரும்பியதைச் செய்து கொடுக்க வேண்டும் என எண்ணிய பாத்திமாவின் தந்தை திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார்.

பாத்திமாவின் தந்தையின் முன்னிலையில் திருமணம் இனிதே நடந்தது. இருவரது வாழ்க்கையும் சந்தோஷமாகத் தொடங்கியது. முறையான சிகிச்சையினால் அசாமின் உடல்நிலை தேறி வந்தது. இடையிடையே இரத்த வாந்தியும் மயக்கமும் வந்தாலும், மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றதால் அசாம் ஆரோக்கியமாக இருப்பதாகவே பாத்திமா உணர்ந்தாள். அசாமிற்கு ஏதும் நேராது என்றும், அவர் ஆயுள் முழுவதும் தன்னோடு வாழ்வார் என்றும் அவள் மனக்கோட்டை கட்டியிருந்தாள்.

பாத்திமா அடிக்கடி அசாமிடம், "உங்கள் நினைவாக என்னுடன் இருக்க ஒரு குழந்தை வேண்டும்" என்று கேட்பாள். ஆனால் அசாம், "இன்னும் சொற்ப

என். எப். றிஹா, இறக்காமம், அம்பாறை மாவட்டம்

காலமே நான் உயிர் வாழ்வேன். எனக்குப் பிறகு இந்தக் குழந்தையை வைத்துக்கொண்டு நீ தனியாகக் கஷ்டப்படக் கூடாது," என்று கூறி மறுத்து வந்தான். ஆனால் இறை அற்புதமோ என்னவோ, ஆறு மாதங்கள் கடந்தும் அசாம் நலமாக இருந்ததால், அவர்கள் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க முடிவெடுத்தனர். அவர்களுக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது.

நாட்கள் நகர்ந்தன. குழந்தைக்கு ஒரு வயதானபோது, பிறந்தநாளை முன்னிட்டு உறவினர்களை அழைத்து விருந்து வழங்கினர். அன்று மிகுந்த மகிழ்ச்சியுடன் அசாம் எல்லா வேலைகளையும் சுறுசுறுப்பாகச் செய்தான். அன்று இரவு 12 மணியளவில் களைப்புடன் தூங்கியவன், அதிகாலையில் எழுப்பும்போது எழவில்லை. பாத்திமா பீதியடைந்து கதறி அழுதவாறே தன் தந்தையின் உதவியுடன் அசாமை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள். ஒவ்வொரு முறையும் மயக்கத்திலிருந்து எழுந்தவன், இந்தத் தடவை நிரந்தரமாகக் கண்களை மூடிவிட்டான்.

இதனை அறிந்த பாத்திமாவின் தந்தை, அவளைச் சமாதானப்படுத்தி வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கே வீட்டாரைச் சுத்தம் செய்யுமாறு கூறினார். உடனே பாத்திமா கோபத்துடன், "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? என் கணவருக்கு ஒன்றும் ஆகாது, அவர் சற்று நேரத்தில் வந்துவிடுவார்," என்று கத்தினாள். அவளைச் சமாதானப்படுத்தி ஓரிடத்தில் அமர வைத்த பாத்திமாவின் தாய், கண்கள் கசிய மெதுவாக உண்மையைச் சொல்லத் தொடங்கினார். தாயின் முகத்தைப் பார்த்தே ஏதோ விபரீதம் என்பதை உணர்ந்த பாத்திமா, பதற்றத்துடன் விபரத்தைக் கேட்டாள். அசாம் இறந்துவிட்ட செய்தியைக் கேட்டவுடன், கையிலிருந்த குழந்தையைத் தரைமீது விட்டவாறே அங்கேயே மயங்கி விழுந்தாள். மயக்கம் தெளிந்த பிறகு, இரண்டு நாட்களாக உணவின்றித் தவித்தாள்.

தன்னோடு நீண்ட காலம் வாழ்வார் என்று நம்பிய கணவர் பிரிந்ததை அவளால் ஏற்க முடியவில்லை. தன் வாழ்க்கை இருண்டுவிட்டதாக உணர்ந்தாள். இதைக் கண்டு வேதனைப்பட்ட அவளது தந்தை, "மகளே! நடந்தது நடந்துவிட்டது, எல்லாம் இறைவனின் கணக்கு. இனி அசாமின்

என். எப். நிஹா, இறக்காமம், அம்பாறை மாவட்டம்

வாரிசான இந்தக் குழந்தையைச் செம்மையாக வளர்த்து, அவனது கனவை நீ நனவாக்க வேண்டும். இதுவரை அவனுக்காக வாழ்ந்தாய், இனி அவனது குழந்தைக்காக வாழ வேண்டும்," என்று தேற்றினார்.

தந்தையின் பேச்சு அவளுக்குப் புதிய தெம்பைத் தந்தது. சிகிச்சைகளுக்காகத் தன் வேலையை விட்டிருந்தவள், மீண்டும் தன் மகளுக்காக வேலைக்குச் செல்லத் தொடங்கினாள். வேலையில் மூழ்கினாலும் அசாமின் நினைவலைகள் அவளைத் தொடர்ந்துகொண்டே இருந்தன.

அச்சமயம் அவளுக்கு லண்டன் செல்வதற்கான கல்வி உதவித்தொகை (Scholarship) கிடைத்தது. ஆனால், அசாம் வாழ்ந்த வீடு, ஊர், நாடு ஆகியவற்றை விட்டுச் செல்ல மாட்டேன் எனப் பிடிவாதம் பிடித்தாள். வெளிநாட்டிற்குச் சென்றால்தான் அசாமின் நினைவுகளிலிருந்து மீண்டு அவள் சற்று நிம்மதியாக இருப்பாள் எனத் பெற்றோர் எண்ணினர். இறுதியில் பெற்றோரின் வற்புறுத்தலுக்கு இணங்கி அவள் சம்மதித்தாள்.

லண்டன் சென்ற அவள், தன் மகளைத் தன் கண் இமை போலப் பார்த்துக்கொண்டாள். மகளின் ஒவ்வொரு அசைவிலும் அசாமின் சாயலையே அவள் கண்டாள். நாளுக்கு நாள் அவளது எண்ணங்கள் அசாமைப் பற்றியே இருந்ததால், அவள் மறுமணம் செய்துகொள்ளவில்லை. தன் மகள் மற்றும் பெற்றோருடன் லண்டனில் தனித்து வாழ்ந்து வருகின்றாள்.



என். எப். நிஹா, இறக்காமம், அம்பாறை மாவட்டம்

## வாசிப்பனுபவம்

சொற்களின் ஆன்மாவே எழுத்துகளின் பவனிகளில் அன்பை இளைப்பாற்றிக் கொள்கிறது. பேரன்பும் சமூகத்தின் மீதான பெருங்கருணையும் கொண்ட மனிதர்கள் மனதில் நேர்மறைச் சிந்தனைகளே வரிசை கட்டி நிற்கும். அதன் வழியே காணும் உள்ளத்தில், செய்யும் செயல்களில், சமூகத்தை உயர்த்தப் பார்க்கும் உன்னதப் பாங்கே எதிரொலிக்கும். அவரவர் வாழ்வைத் தீர்மானிக்கும் முயற்சிகளும் பயிற்சிகளும் தன்னம்பிக்கை உத்திகளும் ஒருங்கிணைகையில், நினைவுகளில் எழுந்து நிற்கும் கனவுகள் உயிர்பெற்றே வாழ்வை நகர்த்திவிடும். அன்பு, அறிவு, கருணை, ஊக்கம், முயற்சி, விழுமியங்களை விதைத்தல், மரியாதையை உயர்த்துதல் என அறச் சிந்தனைகள் இன்றைய அவசரகால ஓட்டத்தில் கொஞ்சம் தமது இருப்பைக் குறைத்துக் கொண்டிருக்கின்றன.

தனிமனிதனின் சிந்தனைகள் பணத்தின் பின்னேயும் வசதிகளின் பின்னேயும் அலையத் தொடங்கும் காலகட்டத்தில், அறிவியல் கருவிகளும் அவற்றின் அதிதீவிர ஊடுருவல் தன்மையும் மனங்களுக்குள் அறச்சொற்களைக்கூடப் புதைத்துவிடுகின்றன. இப்படியானதொரு மயக்க நிலையில் தன்னை ஒப்படைத்தபடி ஓடும் மனிதனுக்கு ஒழுக்கச் செயல்பாடுகளையும், சமூகத்திற்காக நீளும் கரங்களையும் அடையாளம் காட்டுவது ஒவ்வொரு எழுத்தாளரின் உயர்வான கடமையாக முன்நிற்கிறது. அணையாத ஒளிவிளக்காக எல்லோரது உள்ளத்திலும் அன்பினாலும் அறிவினாலும் ஏற்றிவைக்கும் தேவதைகள், எப்போதும் விழிப்பின் பின்னே நின்றபடி நமக்கான வெளிச்சத்தைப் படையலிடுகின்றனர். உறங்காத தேவதைகளின் கதைகள் எப்போதும் நமக்கான உத்வேகத்தையும் உற்சாகத்தையும், சக மனிதர் மீதான மனிதத்தை விதைக்கும் நம்பிக்கையையும் அளிப்பதையே கடமையாகக் கொண்டிருக்கின்றன.

தோழர் இரஜகை நிலவன் காண்பிக்கும் இந்த 24 கதைகளின் தேவதைகளும் சகல தளங்களிலும் பயணித்து நம்மையும் அறிவின் கனிகளை உண்ணச் செய்கிறார்கள். அன்பின் வேர்கள் விரித்திடும் கிளைகள் எங்கும் மனப் பசுமைகளில் விளைச்சலாகத் தேவதைகளின் தவங்கள் காத்திருக்கின்றன. ஆன்மீகம், திரைத்துறை, தொழில்துறை, காதல், சமூகப் பண்பாடு,

கவிஞர் இளையவன் சிவா

## வாசிப்பனுபவம்

முதுமைக்காலப் பயணம், மர்மங்களில் அலையும் மனம், குடும்ப அரசியல், விளையாட்டை விழுங்கும் அதிகாரம், வரதட்சணைக் கொடுமைகள், வறுமைத்தனம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வெளிநாட்டு வாழ்வின் அவலம், அதிகாரத் திமிர்த்தனம் என எழுத்தாளரின் பார்வை எல்லாப் பக்கங்களிலும் விரிவடைந்து, காணும் சம்பவங்களைக் கதைகளாக்கி நமக்குத் தருகின்றன. எளிய மொழித்தன்மையும், உச்சரிக்கவும் உணர்ந்துகொள்ளவும் புரியும்படியான வார்த்தைப் படிமங்களும் கதைகளை உள்வாங்குவதில் முழுமையாக நம்மை ஈடுபடுத்திவிடுகின்றன. இயன்ற அளவு பிறமொழிச் சொற்களைக் கலந்துவிடாமல் கதைகளை நகர்த்திச் செல்லும் அவரது பாங்கு, கதை சொல்லும் அவருக்கான ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் வெளிக்காட்டுகின்றன.

எடுத்துக்கொண்ட செயலில் காட்டும் தொடர் முயற்சியும், கைவிடாத ஊக்கமும் எவ்வளவோ இடையூறுகளைத் தாண்டியும் வெற்றியை ஈட்டும் தன்னம்பிக்கையை எல்லோரது வாழ்விற்கும் அடிப்படைத் தேவைகளாகக் காட்டுகிறது 'நம்பிக்கை ஒளி' என்ற முதல் சிறுகதை.

அதிகாரமும் பணத்திமிரும் பிறரை மதிக்காமல் அலட்சியத்தைக் காட்டி, மனிதத்தன்மையை மறந்துவிடும் மயக்க நிலையை வரவழைத்துவிடுகின்றன. ஒரு கட்டத்தில் அந்த நபருக்குள் மிருகக்குணம் மேலோங்கி, காணும் மனிதர்களை அடிமையாக்கி கசக்கிப் பிழியும் வக்கிரத்தைப் புகுத்திவிடுகிறது. அத்தகு மனதில் ஒரு மரணம் எத்தகு மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என்பதை 'கோபமும் கட்சி மற' கதை கோடிட்டுக் காட்டுகிறது.

கடவுளைக் கொண்டாடும் மனதில் காதலும் சபலமும் எட்டிப் பார்ப்பதில்லை. உள்ளத்தில் பூரிப்பு காதலென விரிந்தபோதும் மனம் கடவுளின் மீது ஈடுபாடும் கவனமும் வைக்கும்போது திசை திரும்புவதில்லை. 'வேதக்கார ஆண்டாள்' கதையின் செல்வியாவும் அப்படியான கடவுள் நம்பிக்கையை நமக்குக் காட்டிவிடுகிறார்.

தனது வாழ்வைச் சீர்குலைத்து நாசமாக்கியவனைப் பழிவாங்கும் வாய்ப்புக்

கவிஞர் இளையவன் சிவா

கைமேல் கிடைத்தபோதும்,

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்"
என்ற அய்யன் வள்ளுவரின் பேத்தியாகி, தாய்மைக் குணமே பெண்களின் தன்னிகரற்ற வரம் என்பதை நிரூபிக்கிறது 'தேவதைகள் தூங்குவதில்லை' கதை.

ஒரு நல்ல பொறுமைசாலி எந்தச் சூழலிலும் தன்னையோ தன்னைச் சார்ந்தவரையோ அவமதிப்பதில்லை; அவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்க முட்டுக்கட்டைகள் போடுவதில்லை. "இப்படித்தான் நடக்கும்" என்ற முன்முடிவுகள் சில சமயங்களில் ஏமாற்றத்தையே பரிசாக்கிவிடுகின்றன. கொஞ்சம் பொறுமையும் கவனிக்கும் தன்மையும் இருந்தாலே எல்லாச் சூழலும் நம்மை வெற்றிப்படியில் ஏற்றிவிடும். பெண் புத்தி சில சமயங்களில் பின் புத்தி ஆகிவிடுகிறது என்பதை 'எதிர்பார்த்து' சிறுகதை வெளிச்சமிடுகிறது.

விளையாட்டில் குடும்ப அரசியலும் அதிகாரமும் நுழையும்போது, உண்மையான விளையாட்டுத் தன்மையும் விளையாட்டு குணமும் மறைந்துபோய்விடுகின்றன. இது எத்தனையோ வீரர்களை முடக்கிப்போட்டு, தேசத்திற்கும் விளையாட்டுத் துறைக்கும் பேரும் புகழும் கிடைக்காமல் தலைகுனிவை ஏற்படுத்திவிடுகிறது. விளையாட்டில் அரசியல் ஏற்படுத்தும் விளைவுகளை 'உயரம் தாண்டுதல்', 'கானல் நீர்' மற்றும் 'மித்ரா' சிறுகதைகள் எச்சரிக்கின்றன.

காதலைவிடக் காதலனின் முன்னேற்றமே பெரிது என்பதை லட்சியமாக்கித் தனது காதலைப் பூட்டிக்கொண்ட புதுமைப்பெண்ணும்; மரபியல் குறைபாட்டால் பிழையான பாலினத்தில் பிறந்துவிட்டு வாழ்வின் அவலத்தில் தன்னைப்புடம் போட்டு எழுந்துவந்த திருநங்கையும்; தன்னை நம்பிப் பணம் போட்ட மக்களைக் கைவிட்டுவிடாமல் தனது சொத்துகளை விற்றுப் பிரச்சினையைத் தீர்க்கப் பார்க்கும் பெரிய மனதுடையோரும்;

## வாசிப்பனுபவம்

உடையின் பளபளப்பைத் தாண்டி வியாபாரத்தில் வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்தும் வணிகத்தில் நேர்மையும் பக்தியும் கொண்டவரும் நூலில் உலா வருகின்றனர்.

கடத்தல், காதல், பாசம், பணம் சம்பாதிப்பதன் அவசியம், தொழிலில் நேர்மை, நட்பின் பயன் என அனைத்தையும் இணைத்து, மர்மத் திரைப்படத்தின் இறுதிக் காட்சிகளில் நம்மைப் பதைபதைக்க வைக்கும் சிறுகதையும் நூலில் விறுவிறுப்பைக் கூட்டுகிறது.

பெற்றோரைக் கைவிட்டுவிட்டுப் பணத்தின் பின்னால் அலையும் பித்தர்களையும், வரதட்சணைக்காகப் பெற்றோரை எதிர்க்கத் துணியாமல் அடிபணிந்து பெண்ணுக்குத் துரோகம் இழைக்கும் ஆணின் கோழைத்தனத்தையும் சில கதைகள் அடையாளமிடுகின்றன. சில கதைகள் வெறுமனே உரையாடல்களாக நின்று வாசிக்கும் நமக்குள் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தத் தவறி கடந்துவிடுகின்றன.


நேர்மறைப் பண்புகளை விதைத்து, கருணையும் எல்லோரையும் மதிக்கும் அன்பையும் நமக்குள் ஏற்படுத்தப் புறப்பட்டிருக்கும் இந்த தேவதைகள் எப்போதும் நமக்கு ஒளிப்பாதை காட்டி, உயர்வெனும் இலக்கை அடையவைப்பதில் தூங்காமல் சேவை செய்கின்றனர். இவ்வாறாகப் புதிய புதிய தளங்களில், புதிய புதிய சிந்தனைகளில் சிறுகதைகள் வழியே பற்பல புதுமைகளை நமக்கு வழங்க எழுத்தாளரின் கற்பனை இன்னும் உயரப் பறக்கட்டுமென வாழ்த்தி மகிழ்கிறேன்.




கவிஞர் இளையவன் சிவா

கட்டுரை

### வாழ்க்கைக் குறிப்பு



கவிமணி தேசிக விநாயகம் (26 செப்டம்பர் 1954) 20ஆம் நூற்றாண்டில் குமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் சிவதாணுப்பிள்ளை -ஆதிலட்சுமி தம்பதியர்க்கு இரண்டு பெண் குழந்தைகளை அடுத்து மூன்றாவதாக 27 சூலை 1876 அன்று தேசிக விநாயகம் பிறந்தார். ஒன்பதாவது வயதில் தன் தந்தையை இழந்தார். எம். ஏ. படித்த கவிமணி பின் ஆசிரியர் பயிற்சி படித்து, தான் படித்த பள்ளியிலேயே ஆசிரியர் ஆனார். உமையம்மை எனும் பெண்ணை 1901இல் மணம் முடித்தார். நாஞ்சில் நாட்டார் தன் மனைவியை குட்டி, பிள்ளாய் என்று அழைத்து கொண்டிருந்த நாட்களில் கவிமணி தன் மனைவியை தாயி என்று மரியாதையுடன் அழைப்பார். குழந்தைப்பேறு இல்லாத கவிமணி தனது அக்காள் மகன் சிவதாணுவை தனது மகன் போல வளர்த்தார்.

### ஆசிரியர் பணி

நாகர்கோவிலிலுள்ள கோட்டார் ஆரம்பப்பள்ளி, நாகர்கோவில் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி மற்றும் திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரி போன்றவற்றில் ஆசிரியராக 36 ஆண்டுகள் பணிபுரிந்தார்.

### குழந்தை இலக்கியப் பணி

தமிழில் குழந்தைகளுக்காக முதன்முதலில் தொடர்ச்சியாகப் பாடல்களை எழுதினார். 1938 ஆண்டு வெளியான அவருடைய மலரும் மாலையும் தொகுதியில் 25 க்கும் மேற்பட்ட குழந்தைப் பாடல்கள், 7 கதைப் பாட்டுகள் இடம்பெற்றிருந்தது. தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு என்ற பாடல் இன்றளவும் பிரபலமாக உள்ள அவரது குழந்தைப் பாடல்களில் ஒன்று.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

## கட்டுரை

### மொழிபெயர்ப்பாளர்

எட்வின் ஆர்னால்டின் Light of Asia வைத் தழுவித் தமிழில் ஆசிய ஜோதியை எழுதினார். பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் பாடல்களைத் தழுவி தமிழில் எழுதினார்.

### ஆராய்ச்சியாளர்



ஆராய்ச்சித் துறையிலும் தேசிக விநாயகம் பிள்ளை பல அரிய பணிகளை ஆற்றியிருக்கிறார். 1922-இல் 'மனோன்மணியம் மறுபிறப்பு' என்ற திறனாய்வுக் கட்டுரையை எழுதினார். சென்னை பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்தில் மதிப்பியல் உதவியாளராக இருந்தார். கம்பராமாயணம் திவாகரம், நவநீதப் பாட்டியல் முதலிய பல நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்திருக்கிறார். 'காந்தளூர்ச்சாலை' பற்றிய ஆய்வு நூலை எழுதினார்.

### விருதுகள்

24 திசம்பர் 1940 இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை கவிமணி என்ற பட்டம் வழங்கினார்.
1943 இல் அண்ணாமலை அரசர் ஆத்தங்குடியில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். பெரும் பொருள் வழங்க முன் வந்தபோது அதை வாங்க மறுத்து விட்டார்.
1954 இல் கவிமணிக்குத் தேரூரில் நினைவு நிலையம் அமைக்கப்பட்டது. அக்டோபர் 2005இல் இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

கட்டுரை


**கவிமணியின் நூல்கள்**

- அழகம்மை ஆசிரிய விருத்தம்
- ஆசிய ஜோதி, (1941)
- மலரும் மாலையும், (1938)
- மருமக்கள்வழி மான்மியம், (1942)
- கதர் பிறந்த கதை, (1947)
- உமார் கய்யாம் பாடல்கள், (1945)
- தேவியின் கீர்த்தனங்கள்
- குழந்தைச்செல்வம்
- கவிமணியின் உரைமணிகள்
- காந்தளூர் சாலை
- தோட்டத்தின் மீது வெள்ளை பசு




**மறைவு**

கவிமணி இறுதிக்காலம் வரை புத்தேரி என்ற ஊரில் வாழ்ந்தார். செப்டம்பர் 26, 1954-ல் காலமானார்.



நாளை

# நமதே

**அடுத்தவரோடு**
**ஒப்பிட்டு உனை நீ**
**தாழ்த்திக் கொள்ளாதே**
**உலகத்தில் சிறந்தது**
**உனக்கு நீயே!**


அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :
9597887847
8870884969




# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com